## <u>பயிற்சிகள்.</u>

வணக்கம் மாணவர்களே,

கீழே கொடுக்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் எழுதி தொலைவரியில் அனுப்பவும். இது இவ்வாரத்திற்கான பாடம். அதனால், இக்கேள்விக்கான பதிலைச் சனிக்கிழமைக்குள் அனுப்பி விடவும். அதோடு, இத்தலைப்பையொட்டி கலந்துரையாட கூகுள் கூடலில் (Google Meet) வியாழன் இரவு **7.00** மணியளவில் சந்திப்போம். அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

நன்றி, மாணவர்களே.

[எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.]

## பாகம் - ஒன்று

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பிரிவு ஒன்று : கவிதை

பண்பிழந்து பாவையரை
    **பதராக்கும் ஆணுலகில்**
பெண்மையினைத் தெய்வமென்று
    பேசவந்த பித்தனடா!

பொதுப்பணத்தைச் சூறையாடி
    போய்ப்பதுக்கும் சூதரிலே
புதுமலர்ச்சி சொல்வதன்றி
    போக்கிழந்த பித்தனடா!

**(கவிவாணர் ஐ. உலகநாதன்)**

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **பாடுபொருள்** யாது? (2 புள்ளி)

2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் ஓசை நயங்கள் இரண்டனை எழுதுக. (4 புள்ளி)

3. (i) **பதராக்கும் ஆணுலகில்** என்பதன் **பொருள்** யாது? (2 புள்ளி)

   (ii)

   | |
   |---|
   | பொதுப்பணத்தைச் சூறையாடி<br>போய்ப்பதுக்கும் சூதரிலே<br>புதுமலர்ச்சி சொல்வதன்றி<br>போக்கிழந்த பித்தனடா! |

   இவ்வடிகளில் கவிஞர் சுட்டிக் காட்டும் **சமுதாயச் சிக்கல்** யாது? (2 புள்ளி)

[10 புள்ளி]